திருச்சி கருமண்டபத்தில் நடைபெற்ற வேளாண் இடுபொருள் விற்பனையாளர் சங்க மாநாட்டில் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே. என். நேரு அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கல்யாணசுந்தரம் முரசொலி, மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகராட்சி மேயர் அன்பழகன், மாநிலத் தலைவர் மோகன் மற்றும் தட்சிணாமூர்த்தி, சத்தியமூர்த்தி, ரவிச்சந்திரன், கழக நிர்வாகிகள் மாவட்ட துணைச் செயலாளர் முத்துச்செல்வம், மோகன்தாஸ், பி.ஆர். பாலசுப்ரமணியன், ராமதாஸ், புஷ்பராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பா.ஜ.க.வின் துணை ஜனாதிபதி வேட்பாளராக சி.பி.ராதாகிருஷ்ணன் அறிவிப்பு!

புதுடெல்லி, ஆக.19- துணை ஜனாதிபதியாக இருந்த ஜெக்தீப் தன்கர், உடல்நிலையை காரணம் காட்டி ராஜினாமா செய்தார். இதனையடுத்து புதிய துணை ஜனாதிபதியை தேர்வு செய்ய வரும் செப்டம்பர் மாதம் 9 ஆம்தேதி தேர்தல் நடைபெற உள்ளது. அன்றைய தினமே ஓட்டு எண்ணிக்கை நடைபெற உள்ளது. இதற்கான வேட்புமனு தாக்கல் துவங்கி நடந்துவருகிறது. ஆகஸ்ட் 21ம் தேதி கடைசி நாள் ஆகும்.இந்தப் பதவிக்கு யார் போட்டியிடுவார்கள் என்பது குறித்து ஆளுங்கட்சி மற்றும் எதிர்க் கட்சிகள் அறிவிப்பு வெளியாகாமல் இருந்தது.

இந்நிலையில், மத்தியில் ஆளும் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் யாரை வேட்பாளராக நிறுத்துவது என்பது குறித்து முடிவு எடுக்க நேற்று முன்தினம் நாடாளுமன்றக் குழு கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் துணை ஜனாதிபதி வேட்பாளராக மகாராஷ்டிர கவர்னராக உள்ள சிபி ராதாகிருஷ்ணனை நிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தியா கூட்டணி சார்பிலும் வேட்பாளரை நிறுத்த திட்டமிடப்பட்டு ள்ளதால், துணை ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. துணை ஜனாதிபதி தேர்தலில் பாராளுமன்ற மக்களவை, மாநிலங்களவை எம்.பி.க்கள் அனைவரும் துணை ஜனாதிபதியைத் தேர்வு செய்ய வாக்களிப்பார்கள். இரு அவைகளிலும் பாரதிய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு எதிர்க் கட்சிகளைவிட அதிக எம்.பி.க்கள் இருக்கிறார்கள். எனவே சிபி ராதாகிருஷ்ணன் எளிதில் வெற்றி பெற வாய்ப்புள்ளது. செப்டம்பர் 9-ஆம் தேதி இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பைத் தலைமைத் தேர்தல் ஆணையம் வெளியிடும்.

சி.பி. ராதாகிருஷ்ணன் தமிழ்நாட்டில் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஆவார். 1957ஆம் ஆண்டு அக்டோபர் 20ஆம் தேதி திருப்பூரில் பிறந்தவர் சி.பி. ராதாகிருஷ்ணன். முதலில் ஜனதா கட்சியில் இருந்த இவர், பின்னர் பாஜகவில் இணைந்தார். 1998, 1999 ஆகிய மக்களவை தேர்தல்களில் கோவை மக்களவை தொகுதியில் போட்டியிட்டு வென்று எம்.பி ஆனார். அதன்பிறகு போட்டியிட்ட மூன்று தேர்தல்களிலும் இரண்டாம் இடம் மட்டுமே கிடைத்தது.

2004 - 2007 காலகட்டத்தில் தமிழ்நாடு மாநில பாஜக தலைவராக பதவி வகித்தார். அப்போது கன்னியாகுமரி முதல் சென்னை வரை யாத்திரை மேற்கொண்டார். 2023ஆம் ஆண்டு பிப்ரவரியில் ஜார்க்கண்ட் மாநில கவர்னராக இவர் நியமிக்கப்பட்டார். ஓராண்டு கழித்து கடந்த ஆண்டு மகாராஷ்டிர மாநில ஆளுநராக மாற்றப்பட்டார்.

கரூர் மாவட்டத்தில்

ரூ.800 கோடியில் வளர்ச்சி திட்டப் பணிகள்!

மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

கரூர், ஆக. 19 - கரூர் மாவட்டத்தில் லைட் ஹவுஸ் ஸ்கீம், திட்டத்தின் மூலம் ரூ. 800 கோடி மதிப்பீட்டில் புதிய வளர்ச்சித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது என கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில்பாலாஜி தெரிவித்தார்.

கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில்பாலாஜி, கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், தலைமையில், கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.8.08 கோடி மதிப்பீட்டில் 97 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைத்தும். 6 முடிவுற்ற பணிகளை திறந்தும் வைத்தார்.

பின்னர் வி.செந்தில் பாலாஜி கூறியதாவது

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தக் கூடிய வகையில் பல்வேறு புதிய சிறப்பு திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு, ஒவ்வொரு பணிகளாக நிறைவு செய்யப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படுகின்றன.

கரூர் மாநகராட்சி மண்டலம் 3 மற்றும் 4 பகுதிகளுக்கு புதிய கிணறு உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டு, இந்த தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்படுகின்றன. 1.66 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த பணிகள் மூலமாக மண்டலம் 3, 4 ஆகிய மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் ஏற்கனவே வழங்கப்பட்ட 11 MLD குடிநீர் அளவிலிருந்து உயர்த்தி. 15 MLD குடிநீர் வழங்கக்கூடிய அளவிற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கரூர் மாநகராட்சியில் "லைட்ஹவுஸ் ஸ்கீம்" என்ற திட்டத்தின் மூலம் ரூ. 800 கோடி மதிப்பீட்டில் விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை அமைத்தல். புதிய குடிநீர் திட்டப் பணிகள் மேற்கொள்ள அரசின் நிர்வாக ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன. கரூர் மாநகராட்சியில் ஏற்கனவே கடந்த 4 ஆண்டுகளில் ரூ. 328 கோடி மதிப்பீட்டில் பதிதாக சாலைகள். கால்வாய்கள், தெருவிளக்குகள் உள்ளிட்ட பொதுமக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் பணிகள் நிறைவுற்று, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. இவ்வாறு தொடர்ச்சியாக மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் முதல மைச்சர் அவர்கள் நிதிகளை வழங்கி கொண்டிருக்கிறார்கள் இவ்வாறு வி. செந்தில்பாலாஜி தெரிவித்தார்.

கரூர் மாநகராட்சி வார்டு எண் 35. 20. 14 12. 17, 19, 38, 42, 37, 36, 46, 43, 44, 47, 48, 41, 39, 40, 16, 15, 18. 13 க்கு உட்பட பகுதிகளில் புதிதாக சிமெண்ட் சாலை, மழை நீர் வடிகால், தார்சாலை மேம்படுத்தும் பணிகள், பேவர் பிளாக் அமைக்கும் பணிகள் மற்றும் மண்டலம் 3 க்குட்பட்ட கட்டளை தாந்தோணி, கட்டளை சணப்பிரட்டி, தலைமை நீரேற்று நிலையம் மற்றும் மூலக்காட்டானூர் நீருந்து நிலையத்தில் வட்டக்கிணறு தூர்வாருதல், டிஜிட்டல் அளவு மானி மின் தேக்கி. நீர்மூழ்கி பம்பு செட் உபகரணங்கள் விநியோகம் மற்றும் சோதனை செய்து இயக்குதல் பணிகளையும்.

கட்டளை சணப்பிரட்டி நீருந்து நிலையத்தில் புதிய நீர்மூழ்கி மோட்டார். மின் உபகரணங்கள் மற்றும் வட்ட கிணறு அமைக்கும் பணிகளையும், மண்டலம் 4 க்குட்பட்ட தலைமை நீரேற்று நிலையம். பொன்நகர் நீருந்து நிலையத்தில் டிஜிட்டல் அளவு மானி, தானியங்கி மின்தேக்கி, டிரான்ஸ்பார்மர், ஜெனரேட்டர் பாதுகாப்பு உபகரணங்கள் விநியோகம் மற்றும் சோதனை செய்து இயக்குதல் பணிகளையும், 165 எச்.பி. மின் மோட்டார் பம்பு செட் 300 மீ இடைமட்ட ஆழ்துளை கிணறு சுத்தம் செய்யும் பணிகளையும், 50 எச்.பி நீர் மூழ்கி பம்பு செட் மற்றும் இதர மின் உபகரணங்கள் விநியோகம் மற்றும் சோதனை செய்து இயக்கும் பணிகளையும் என மொத்தம் ரூ.8.08 கோடி மதிப்பீட்டில் 103 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை வி. செந்தில்பாலாஜி தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் ஆர். இளங்கோ. கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாம சுந்தரி, மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன், மாநகராட்சி மேயர் வெ. கவிதா, மாநகராட்சி ஆணையர் சுதா, கரூர் வருவாய் கோட்டாட்சியர் முகமது பைசல், துணை மேயர் . ப. சரவணன். மாநகராட்சி செயற்பொறியாளர் சுந்தர்ராஜ், மண்டல குழுத் தலைவர்கள் எஸ்பி. கனகராஜ், ஆர்.எஸ். ராஜா. மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

எழுச்சித் தமிழர் தொல்.திருமாவளவனின்

சிற்றன்னை திருமதி செல்லம்மாள் மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

சென்னை, ஆக. 19 - விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் அவர்களின் சிற்றன்னை திருமதி.செல்லம்மாள் அவர்கள் நேற்று முன்தினம் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்து கிறோம்.

இச்செய்தியறிந்ததும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

ஆழ்ந்த இரங்கல்!

அன்புச் சகோதரர் - எழுச்சித் தமிழர் தொல். திருமாவளவன் அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவிக்கத் தொலைபேசியில் அழைத்தபோது, தனது சிற்றன்னையின் மறைவு குறித்துத் தெரிவித்தார்.

சிற்றன்னையின் மீதான அவரது பாசப் பிணைப்பையும் - அவரது மறைவு ஏற்படுத்தியிருக்கும் வேதனையையும் - உள்ளத்தில் நிறைந்திருந்த சோகத்தையும் உணர்ந்து கண்கள் கலங்கினேன். அன்புச் சகோதரர் அவர்களுக்கும் - அவரது குடும்பத்தினருக்கும் - உறவினர்களுக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கரூர் மாவட்டக் கழக அலுவலகம் கரூர் கலைஞர் அறிவாலயத்தில், முத்தமிழறிஞரின் மனசாட்சி, அய்யா முரசொலி மாறன் அவர்களின் பிறந்தநாளில் அவரது திருவுருவப் படத்திற்கு மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். சட்டமன்ற உறுப்பினர்கள், அனைத்து கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் திரளாக கலந்து கொண்டனர்.

தருமபுரி புறக்கணிப்பா? விவரம் அறியாமல்,

அரைவேக்காட்டு அறிக்கை விடுவதை அன்புமணி நிறுத்திக் கொள்ள வேண்டும்!

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கை!

சென்னை, ஆக. 19 - "சோற்றுக்குள் முட்டையை மறைக்கலாம். அன்புமணி பூசணிக்காயையே மறைத்திருக்கிறார்!" என்றும் "தருமபுரியைப் புறக்கணித்திருந்தால் நாடாளுமன்றத்தில் நூற்றுக்கு நூறு வெற்றி எப்படி கிடைத்திருக்கும்?" என்றும் குறிப்பிட்டு கடலூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சருமான எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

"2021 சட்டப்பேரவைத் தேர்தலில் தருமபுரியில் மொத்தமுள்ள 5 தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணி வீழ்த்தப்பட்டதற்குப் பழிவாங்கும் வகையில்தான் தருமபுரி மாவட்டத்தை முதலமைச்சர் புறக்கணித்து வருகிறார்'' என அன்புமணி ராமதாஸ் அவர்கள் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

சோற்றுக்குள் முட்டையை மறைக்கலாம்; அன்புமணி பூசணிக்காயையே மறைத்திருக்கிறார். 2024 நாடாளுமன்றத் தேர்தலில் நூற்றுக்கு நூறு வெற்றியை திமுக கூட்டணிக்கு மக்கள் தந்தது எப்படி? அன்புமணி சொல்வது போலத் தருமபுரியைப் புறக்கணித்திருந்தால், இந்த வெற்றி சாத்தியம் ஆகியிருக்குமா? இந்தக் கணக்குகூட தெரியாமல் அன்புமணி, வாய் புளித்ததோ மாங்காய் புளித்தோ என அவதூறுகளை அள்ளித் தெளித்திருக்கிறார்.

"தருமபுரி மாவட்டம் மீதான வன்மத்தைக் கைவிடுங்கள்: காவிரி உபரிநீர் திட்டம் உள்ளிட்ட திட்டங்களைச் செயல்படுத்துங்கள்" எனச் சொல்லியிருக்கிறார். சொந்தக் கட்சியிலேயே தனக்கு ஓர் இடமில்லாமல் வன்மத்தை வைத்துக் கொண்டு தந்தையுடன் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கும் அன்புமணியின் அறிக்கை விரக்தியின் உச்சம். தன் இயலாமையை மறைக்க இருப்பை தக்க வைத்துக் கொள்ள, தருமபுரியைப் பகடைக்காயாய் பயன்படுத்துகிறார். எந்தப் பாகுபாடும் காட்டாமல் தருமபுரியைச் சமதருமபுரியா கத்தான் திராவிட மாடல் அரசு நடத்துகிறது. அதனை வரும் சட்டமன்றத் தேர்தல் முடிவு காட்டும்.

"தருமபுரி மொரப்பூர் ரயில் பாதை திட்டத்திற்காக ஒரு கைப்பிடி மண் கூட கையகப்படுத்தப்படவில்லை" என்று சொல்லியிருக்கிறார் அன்புமணி. மொரப்பூர் தருமபுரி புதிய அகல இரயில் பாதை திட்டத்திற்கான நிர்வாக அனுமதி 17.04.2023 அன்று வழங்கப்பட்டு, கடந்த வருடம் மட்டும் 78.54 ஹெக்டேரில் 54.14. ஹெக்டேர் நில எடுப்புக்காக அறிவிக்கை செய்யப்பட்டது. 60 விழுக்காடு நில எடுப்பு பணிகள் முடிவடைந்துள்ளன. புறம்போக்கு நிலங்கள் 13.72.0 ஹெக்டேர் கையகப்படுத்தப்பட்டுள்ளன. இதில், 2000 பட்டாதாரர்களுக்கு இதுவரை ரூ.29 கோடி இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 24.40.02 ஹெக்டர், ரயில் நிலையம் மூக்கனூரில் அமைவது குறித்துத் திருத்திய நில அட்டவணை தயாரிக்கும் பணியில் உள்ளது. நில எடுப்புப் பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

ஒன்றிய அரசின் ரயில்வே திட்டங்களில் கூட தமிழ்நாடு அரசைக் குறை சொல்லும் அன்புமணி என்றைக்காவது மோடி அரசைப் பற்றி விமர்சனமாவது வைத்திருக்கிறாரா? ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு என்ற வார்த்தைகூட இடம்பெறவில்லை. அதையாவது கண்டித்திருக்கிறாரா? "ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு என்ற பெயர் வந்திருக்க வேண்டும் என்றால் தமிழ்நாட்டில் 25 எம்.பி.க்களை ஜெயித்து கொடுத்திருக்க வேண்டும்" என்று இறுமாப்புடன் சொன்னார் அன்புமணி ராமதாஸ்.

அப்படிச் சொன்னவர் நாடாளுமன்றத்திற்குப் போய் என்ன சாதித்தார்? அவருடைய பார்லிமெண்ட் ப்ராகிரஸ் ரிப்போர்ட் லட்சணம் என்ன தெரியுமா? அன்புமணி மக்களவையில் பணியாற்றிய ஆறு ஆண்டுகளில் மொத்தம் 304 நாட்கள் அவை நடைபெற்றன. அதில் வெறும் 92 நாட்கள் மட்டுமே அன்புமணி அவைக்குப் போனார். அதாவது அவரது வருகைப்பதிவு சதவிகிதம் வெறும் 30தான். நாடாளுமன்றத்தில் தருமபுரி மக்களுக்கு என்ன பெற்றுத் தந்தார்?

தருமபுரி காவிரி உபரி நீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில் காவிரி வடிநிலப் பகுதியிலிருந்து ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட பாசனப் பரப்பைத் தவிரப் புதியதாகப் பாசனப்பரப்பைக் காவிரி வடிநிலத்தில் உருவாக்க இயலாது எனக் காவிரி நதிநீர் பங்கீட்டுத் தீர்ப்பாயம் கூறியுள்ளது. காவிரி வடிநிலத்தின் உபரி நீரைப் பிற வடிநிலத்திற்கு வழங்குவது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் வழக்குகளின் தீர்ப்பு கிடைத்த பின்னரே காவிரியில் நீரேற்று திட்டங்களைக் குறித்து ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள இயலும். இவையெல்லாம் தெரிந்தும் தருமபுரி மக்களை ஏமாற்றுவதற்காக வெற்று நாடகம் போட்டிருக்கிறார் அன்புமணி.

சிப்காட் தொழிற் பூங்கா திட்டம் முறையாகச் செயல்படுத்தப்படவில்லை என்று சொல்லி இருக்கிறார் அன்புமணி. தருமபுரி தொழிற் பூங்காவிற்கு ஆரம்பக்கட்டப் பணிகளான அணுகு சாலை மற்றும் நுழைவாயில் தகவல் பலவை, தெரு விளக்குகள் மற்றும் இதர பணிகள் அமைக்கும் பணி ரூபாய் 12.39 கோடி திட்ட மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு ள்ளது. அடுத்த கட்டமாக 200 ஏக்கர் பரப்பளவில் உட்கட்டமைப்பு பணிகள் ரூ. 93 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு, பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. இணையதளம் மூலமாக 200 ஏக்கர் நிலத்தில் தொழில் முனைவோர்களுக்காக நிலம் ஒதுக்கிடும் பணி நடைபெற்று வருகிறது. இதில் ஏழு தொழில் நிறுவனங்களுக்கு இடஒதுக்கீடு இறுதி செய்யப்பட்டுள்ளது.

எனவே, தன் கட்சியிலும் தமிழ்நாட்டு அரசியலிலும் இடமில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் அன்புமணி இனியாவது விவரங்களை அறிந்து பேச வேண்டும். அல்லது அவரது சொந்தக் கட்சி பதற்றம் தீரும் வரை இப்படி அரைவேக்காட்டு அறிக்கை விடுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் தெரிவித்திருக்கிறார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

விருத்தாசலம் எம். செல்வராஜ்

ஆகஸ்ட் 19 (1997)

தந்தை பெரியார் தலைமையில் 1944ஆம் ஆண்டு திராவிடர் கழகத்தில் சேர்ந்தார். பின்னர், அண்ணா தலைமையில் தி.மு.க. தொடங்கிய காலம் முதல் தொடர்ந்து தொய்வில்லாமல் கழகப் பணியாற்றியவர்.

தென்னாற்காடு மாவட்டத்தில் கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் ஒருவராக விளங்கியவர். மாவட்டக் கழகச் செயலாளர், கழக அமைப்புச் செயலாளர், மூன்று முறை தணிக்கைக்குழு உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர். தமிழக சட்டப்பேரவைக்கு மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.

மக்கள் பிரச்சினைக்காக கழகம் நடத்திய பெரும்பாலான போராட்டங்களில் பங்கேற்றவர். விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர்.

நெருக்கடிநிலை காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர்.

கழகச் சார்பில் 1996ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் 'பெரியார் விருது' வழங்கி சிறப்பித்தார்கள்.

தலைமைக் கழகம்
தி.மு.க.